# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093831

1. District : மாவட்டம் தஞ்சாவூர்  PS: காவல்நிலையம் VXAC  Year: ஆண்டு 2019  FIR No.: மு.த.அ. எண் 06/2019  Date: நாள் 01.07

2. (i) Act சட்டம்: Sec. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: Sec. 7.
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 28.06.19  Date from : நாள் முதல் –  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 12.00 hrs  Time from : நேரம் முதல் –  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.07.2019  Time : நேரம் 10.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.07.2019  Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ வாய்மொழியாக (வாக்குமூலம்)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 55 கி.மீ. தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி இடையாத்தி தெற்கு. கிராம அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கோ. நடராஜன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்...
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/19  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி மந்திர கோன் வீதி, இடையாத்தி வடக்கு கிராமம், பட்டுக்கோட்டை தாலுகா, தஞ்சா... மா...

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பாலன் கிராம நிர்வாக அலுவலர், இடையா... பட்டுக்கோட்டை தாலுகா.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — வாரியான தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 01.07.2019ம் தேதி காலை 9.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.நடராஜன், த/பெ.கோவிந்தன், மந்திக்கோன்விடுதி, இடையாத்தி வடக்கு கிராமம், பட்டுக்கோட்டை தாலுக்கா என்பவர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து என் முன் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தும், படித்துக்காண்பித்து, கையொப்பம் பெற்று, புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்த இடையாத்தி தெற்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.பாஸ்கர் என்பவரின் நடவடிக்கை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டும், வழக்கிற்கான உரிய முகாந்திரம் உள்ளது என்பதனை உணர்ந்தும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளரிடம் புகாரின் விவரம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு: வாக்குமூலம் திரு.நடராஜன், வயது.52/2019, த/பெ.கோவிந்தன், மந்திக்கோன்விடுதி, இடையாத்தி வடக்கு கிராமம், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். நான் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கோ. நடராஜன்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
1-7-19

P. [signature] 1/7/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.07.2019

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Inspector of Police, VAC, Thanjavur

இடையாத்தி வடக்கு கிராமம், மந்திக்கோன்விடுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை, தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்துபோட கற்றுக்கொண்டேன். நான் கல்யாணம் ஆவதற்கு முன்பு சிங்கப்பூரில் வேலை செய்தேன். பிறகு ஊருக்கு வந்து கல்யாணம் முடித்த பிறகும் சிங்கப்பூர் சென்று வேலை பார்த்தும், அப்புறம் விவசாயம் மூலம் கிடைத்த பணத்தை வைத்து கொஞ்சம் கொஞ்சமாக சொத்துக்கள் வாங்கினேன். இடையாத்தி வடக்கு கிராமத்தில் வசிக்கும், லேட் பசுக்கார வீரப்பக்கோனார் மகன் முத்துச்சாமியிடமிருந்து இடையாத்தி தெற்கு கிராமத்தில் சிட்டா எண்.2522 ன்படி உள்ள சர்வே எண்.101-3C ல் 0.32.50 ஏர்ஸ், சென்ட் 80 பூராவும் வாங்க முடிவு செய்து, அவரிடம் கேட்டபோது சிட்டாவில் முத்துக்கோனார் மகன் வீரப்பக்கோனார் என இருந்தது, அதனால் முத்துச்சாமியிடம் கேட்டபோது, என் அம்மா மாரியாயி 10.07.2002ல் இறந்துவிட்டார். அப்பா 26.12.2011ல் இறந்துவிட்டார் என்றும், இறந்தவர்கள் இருவருக்கும் நானும், என் உடன் பிறந்த சகோதரிகள் வளர்மதி, மகாலெட்சுமியும் தான் வாரிசு. அப்பா, அம்மா இறந்ததற்கான இறப்பு மற்றும் வாரிசு சான்று வைத்துள்ளேன் என்றும், அந்த இடம் அப்பா வீரப்பகோனார் பெயரில் உள்ளது என இடையாத்தி தெற்கு VAO திரு.பாஸ்கரிடம் கைசிட்டா, அடங்கல் வாங்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். நான் இதையெல்லாம் வைத்து வீரப்பகோனார் மகன் முத்துச்சாமியிடம் 2018ம் வருடம் பிப்ரவரி மாதம் 2 ந்தேதி ரூ.70,000/- த்திற்கு மேற்படி நிலத்தை கிரயம் பெற்றேன். அந்த நிலத்தை என் பெயரில் பட்டா மாற்றம் செய்யாமல் இருந்தது. எனவே பட்டா மாற்றம் செய்வதற்காக விசாரித்து கொல்லைக்காடு சொஸைட்டியில் உள்ள இ சேவை மையத்தில் ரூ.60/- கொடுத்து நான் வைத்திருந்த எல்லா ஆவணங்களையும், கொடுத்து பட்டா மாற்றம் செய்வதற்காக 21.06.2019 ந்தேதி பதிவு செய்தேன். பதிவு செய்ததற்கு ஒரு ரசீது கொடுத்தார்கள். அப்போது உடனே VAO வை பார்க்க சொன்னார்கள். நானும் 21.06.2019 முதல் 27.06.2019 ந்தேதி வரை இடையாத்தி தெற்கு VAO திரு.பாஸ்கர் அவர்களை இருக்கிறாரா என போய் பார்த்து வந்தேன். அவர் வரவில்லை என சொன்னார்கள். செல்போனில் பேசினேன். கால் எடுக்கவில்லை. கடந்த 28.06.2019 ந்தேதி இடையாத்தி தெற்கு கிராம VAO திரு.பாஸ்கர் அவர்களை சுமார் 12 மணியளவில் பார்க்கச்சென்றேன். VAO இருந்தார். அப்போது ஏற்கனவே இடையாத்தி வடக்கில் நீங்க இருந்தப்ப, பட்டா மாற்ற கொடுத்ததற்கு இன்னும் பட்டா வரவில்லை என சொல்லிவிட்டு, இடையாத்தி தெற்கில் ஒரு இடம் வாங்கியிருக்கேன் எனக்கூறி, நான் பட்டாவுக்கு ஆன்லைனில் பதிவு செய்த Copy, பத்திர நகல் அதனுடன் கூடிய எல்லாத்தையும் கொடுத்தேன். அவரும் வாங்கி பார்த்துவிட்டு சரி பார்க்கிறேன் என சொன்னார். என்னய்யா ஏற்கனவே கொடுத்ததையும் பண்ணிக்கொடுக்கல, இதையாச்சும் பண்ணிக்கொடுங்க என கேட்டேன். சும்மா கேட்டால் எப்படி, பணம் கொடுக்கனும் என கேட்டார். அதற்கு என்னய்யா பார்த்துச் செய்யுங்கய்யா என சொன்னேன். அதற்கு VAO பாஸ்கர்

ரூ.2000/- கொடு உடனே முடித்து தருகிறேன் என சொல்லி, இப்ப இருக்கா என கேட்டார். நான் இப்ப கையில பணம் இல்லையென சொன்னேன். எல்லாத்தையும் திரும்ப என்னிடம் கொடுத்திட்டு திங்கட்கிழமை வா என சொன்னார். எப்ப வர என கேட்டேன். எப்பனாலும் வா இருப்பேன் என சொன்னார். நானும் சரி என சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு VAO லஞ்சமா கேட்ட ரூ.2000/- கொடுக்கவிருப்பமில்லை. பிறகு சனி ஞாயிறு லீவு என்பதால் உங்க விஜிலென்ஸ் ஆபீஸ் லீவா இருக்கும் என நினைத்து நான் வரல. இன்று 01.07.2019 ந்தேதி காலை 7 மணிக்கு ஊரிலிருந்து பஸ்ல புறப்பட்டு காலை 9 மணிக்கு உங்க அலுவலகம் வந்து நடந்ததை சொன்னேன். நான் VAO பாஸ்கரிடம் காட்டிய கம்ப்யூட்டரில் பதிவு செய்த ரசீது நகல், கிரய பத்திர நகல் நகல், வீரப்ப கோனார், மாரியாயி இறப்பு சான்று நகல்கள், வாரிசு சான்று நகல், கம்ப்யூட்டர் சிட்டா நகல், VAO கைசிட்டா நகல், VAO திரு.பாஸ்கர் கொடுத்த அடங்கல் காப்பி மற்றும் அதோடு இருக்கும் 6 பேரின் ஆதார் நகல்கள் ஆகியவற்றை கொடுத்தேன். என்னிடம் பட்டா மாற்றம் செய்ய பரிந்துரை செய்து அனுப்ப VAO கேட்ட ரூ.2000/- பணத்துடன் வந்துள்ளேன். என்னிடம், ரூ.2,000/- லஞ்சம் கேட்ட VAO திரு.பாஸ்கர் மீது நடவடிக்கை எடுக்கும்படி சொன்னேன். நான் சொல்லச் சொல்ல நீங்கள் அப்படியே எழுதினீர்கள், படிக்க கேட்டேன், சொன்னபடி இருந்தது. Sd/-.கோ.நடராஜன், 01/07/2019.

மேற்படி வாக்குமூலம் ஆய்வாளராகிய என்னால் இன்று 01.07.2019ம் தேதி 9.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இன்று 01.07.2019ந் தேதி 10.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.06/2019 பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் (Amendment Act) 2018 படி வழக்கு பதிவு செய்தேன். Sd/- P.Padmavathi, 01/07/19, Inspector of Police, V&AC, Thanjavur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் வாக்குமூலம், வாக்குமூலத்தின் போது மனுதாரர் ஆஜர் செய்த கம்ப்யூட்டரில் பதிவு செய்த ரசீது, கிரய பத்திர நகல், வீரப்ப கோனார், மாரியாயி இறப்பு சான்று, வாரிசு சான்று, கம்ப்யூட்டர் சிட்டா, VAO கைசிட்டா, VAO திரு.பாஸ்கர் கொடுத்த அடங்கல் காப்பி மற்றும் அதோடு இருக்கும் 6 பேரின் ஆதார் நகல் ஆகியவற்றுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

P. Padmavathi 1/7/19
(P. PADMAVATHI)
Inspector of Police
V&AC, Thanjavur.